# வாரிக் கொடுப்பதை அள்ளிப் பருகுவோம்!

நேர்மறை சிந்தனைகளையும் எதிர்மறை சிந்தனைகளையும் வெவ்வேறு என்று எண்ணிவிட வேண்டாம். ‘இரண்டும் ஒன்று’ என்று சொல்வதைவிட, ‘சிந்தனைகள்’ என்ற ஒற்றை வார்த்தையில் இரண்டையும் அடக்கிவிடலாம்.

சிரிப்பது, அழுவது, வருந்துவது போலவே சிந்திப்பதும் ஒரு செயல். பலரும் பொதுவாக சிந்திப்பதே நேர்மறையாகத்தான் இருக்கும். நம்முடைய பழைய அனுபவங்களால் சாதாரண விஷயங்களைக் கூட பெரிதுபடுத்தி அணுகுவதாலும், நாமாக கற்பனை செய்துகொள்வதாலும், உண்டாகும் விளைவுகள் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தும். அவ்வளவே! சிந்தனையில் எதுவும் மாறுபடுவதில்லை, விளைவுகளில்தான் மாறுபடுகிறது.



உதாரணமாக, எல்லோருமே சாம்பாரை ஒரே லாஜிக்கில்தான் சமைக்கிறோம். ஆனால், அனைவரது கைப்பக்குவமும் ஒன்றுபோல் இருப்பதில்லை. அதில் சேர்க்கப்படும் உப்பு, புளி, மிளகாய்ப் பொடி, பெருங்காயம் இவற்றின் அளவுகளோடு அதில் நாம் கலக்கும் தண்ணீரின் அளவில்தான் சூட்சுமமே அடங்கியுள்ளது. தண்ணீர் கொஞ்சம் கூடினாலும், குறைந்தாலும், சுவை அடியோடு மாறிவிடும். நாம் சேர்க்கும் பொருட்களின் கலவையே ருசியைத் தீர்மானிக்கிறது.

அதுபோல்தான் நம் சிந்தனையில் நம் அனுபவம் எனும் பொருட்களின் கலவையை சேர்ப்பதற்கு ஏற்ப, விளைவுகளில் நேர்மறையும் எதிர்மறையும் வெளிப்படும். அனைவருக்குமே சிந்தனைகள் ஒன்றாகத்தான் இருக்கும். ‘நமக்கு கெட்டவைதான் நடக்கும்’ என்றும், ‘நாம் தோல்விதான் அடைவோம்’ என்றும் நினைத்துக்கொண்டா வாழ்க்கையை நடத்துகிறோம்? அப்படி ஒவ்வொரு அடியையும் எடுத்து வைத்தால் மனிதன் வாழவே முடியாது. நித்தம் செத்துப் பிழைக்க வேண்டியிருக்கும்.

**14**

**வாழ்க்கையின் அப்லோடும் டவுன்லோடும்!**

■ காம்கேர் கே.புவனேஸ்வரி

ஒரு குழந்தை பிறக்கிறது. அதை என்ன படிக்க வைக்க வேண்டும், அது என்னவாக வர வேண்டும், அது எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ வேண்டும் என பெற்றோராய் நமக்குள்தான் எத்தனை எத்தனை எதிர்பார்ப்புகள். அந்தக் குழந்தையுடன் சேர்த்து நம் கனவுகளையும் அல்லவா சுமக்கத் தொடங்கிவிடுகிறோம்! அதற்கேற்ப திட்டமிடவும் பணத்தை சேமிக்கவும் ஆரம்பித்து விடுகிறோம். ஆனால், அந்தக் குழந்தை வளரும்போது எதிர்பாராத ஏதோ விபரீதம் ஏற்படுவதாக வைத்துக்கொள்வோம். இது இப்படித்தான் நடக்கும் என முன்கூட்டியே தெரியாதிருப்பதால்தான் நாம் உயிர்ப்புடன் வாழ்கிறோம். இது முன்பே தெரிந்துவிட்டால் நம்மால் நிம்மதியாக மூச்சுவிட முடியுமா?

நம் நம்பிக்கைக்கும், நம் முகத்தில் அறைந்து வாழ்க்கை சொல்லிக்கொடுக்கும் நிதர்சனத்துக்கும் இடையே உள்ள இடைவெளியில்தான் நம் வாழ்க்கையின் உயிர்ப்பு அடங்கியுள்ளது.

அகந்தை, அறியாமை, அலட்சியம் ஆகியவற்றை சிந்தனையுடன் கலக்கும்போது அது எதிர்மறை விளைவுகளை உண்டாக்குகிறது. சமயோசிதம், அறிவாற்றல், பொறுப்பு ஆகியவற்றை சிந்தனையுடன் கலக்கும்போது உண்டாகும் விளைவுகள் நேர்மறையாக அமையப் பெறும். நம் சிந்தனையுடன் நாம் எந்தக் கலவையைக் கலக்கப் போகிறோம்? அதுவே நாம் நேர்மறை சிந்தனையுள்ள மனிதர்களா, எதிர்மறை சிந்தனையுள்ள மனிதர்களா என்ற முத்திரையைக் கொடுக்கும்.

ஒரு நாள் வெளியே வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. மதியம் குழாயைத் திறந்தால் தண்ணீருக்கு பதில் வெந்நீர் வந்தது. மாலை ஐந்து மணிவாக்கில் மேகம் கருத்து சில்லென காற்றடிக்கத் தொடங்கி சில நிமிடங்களில் சடசடவென மழை.



இடைஞ்சலாய் பரபரத்து அங்கும் இங்கும் ஓடுவதற்கு மனிதர்கள் இல்லாததால், மழையும் விச்ராந்தியாய் பெய்யத் தொடங்கியது. அரை மணி நேரம் கொட்டித் தீர்த்தது. முகம் அலம்புவதற்கு பைப்பைத் திறந்தால் தண்ணீருக்கு பதில் ‘ஐஸ்’ நீர்.

அதிகாலை முதல் தொடர்ச்சியாக 12 மணி நேரம் சூரியனின் வெக்கையை உள்வாங்கிக்கொண்டிருந்த பூமி, அரை மணி நேர மழைக்கே குளிர்ந்துவிட்டிருந்தது. துளி கருணை போதுமானதாக உள்ளது, பூமித்தாய் குளிர்வதற்கு!

நமக்கு உதவி செய்யும் வாய்ப்பும் வசதியும் இல்லாவிட்டாலும், ‘உதவி செய்ய வேண்டும்’ என மனதால் நினைத்தாலே போதும்... நல்லது செய்ததற்கு ஈடான பலன் கிடைத்துவிடும்.

மகாபாரதத்தில் ஒரு நிகழ்வு. தான தர்மங்கள் செய்வதில் கர்ணனை மிஞ்சுவதற்கு யாருமே கிடையாது. அவர் இறந்த பிறகு சொர்க்கத்துக்குச் சென்றார். அங்கு சென்றதும் அவருக்குப் பசி எடுத்தது. அங்குள்ள தேவதூதர்களிடம், ‘‘சொர்க்கத்தில் பசி எடுக்குமா?’’ என ஆச்சர்யத்துடன் கேட்கிறார். அதற்கு அவர்கள், ‘‘உன் ஆள்காட்டி விரலை வாயில் வைத்துக்கொள்’’ என சொல்கிறார்கள். கர்ணன் குழப்பத்துடன் அப்படியே செய்கிறார். என்ன அதிசயம்... பசி அடங்கி விடுகிறது.

கர்ணன் புரியாமல் விழிக்க, தேவதூதர்கள் காரணத்தைச் சொல்கிறார்கள். ‘‘கர்ணா! நீ எத்தனையோ தான தர்மங்கள் செய்தாய். ஆனால் அன்ன தானம் மட்டும் செய்யவே இல்லை. அதனால்தான் சொர்க்கத்தில் உனக்கு பசி ஏற்பட்டது. பகவான் ஸ்ரீகிருஷ்ணர் போரை நிறுத்துவதற்காக தன் பரிவாரங்களுடன் துரியோதனனிடம் தூது வந்த சமயம் ‘எங்களுக்கு சாப்பிட எங்கே உணவு தயாராகியுள்ளது’ என கேட்டபோது, ‘அதோ அங்கே’ என உன் ஆள்காட்டி விரலால் உணவு இருந்த இடத்தை சுட்டிக் காட்டினாய். அதனால் உன் ஆள்காட்டி விரல் அன்ன தானம் செய்த புண்ணியத்தைப் பெற்றது. எனவேதான் அந்த விரலை வாயில் வைத்ததும் உன் பசி அடங்கியது!’’

இப்படித்தான் வாழ்க்கை நம்மிடம் பெரிதாக எதையும் எதிர்பார்ப்பதில்லை. ஒரு துளி நேர்மையை, ஒரு துளி ஒழுக்கத்தை, ஒரு துளி மனிதத்தை வெளிப்படுத்தினால் போதும்... வாழ்க்கை நமக்கு அள்ளித் தரக் காத்திருக்கும்.

ஒரு மாணவனின் தேர்வுத்தாளை திருத்தும் ஆசிரியர், அவன் 33 மதிப்பெண் மட்டுமே எடுத்திருந்தால், அப்படியே விட்டுவிட மாட்டார். ஏதேனும் ஒரு பதிலுக்கு இரண்டு மார்க் அதிகம் போட முடியுமா என்று பார்த்து, மனிதாபிமானத்தின் அடிப்படையில் அந்த மாணவனின் மதிப்பெண்ணை 35 ஆக்கி பாஸ் செய்ய வைப்பார். அதைப் போல்தான் வாழ்க்கையும் நம்மிடம் எங்கேயாவது குட்டியூண்டு நல்லது தென்படுகிறதா என்று பார்த்துக்கொண்டே இருக்கும். அதன் கண்களுக்கு நம்மிடம் தூசு போல ஏதேனும் நல்லவை ஒட்டிக்கொண்டிருப்பது தெரிந்தால்கூட போதும்... அதற்கு குஷி வந்துவிடும். ‘இந்தா... இந்தா...’ என பல நன்மைகளை வாரிக் கொடுக்கத் தொடங்கிவிடும். ●

**இந்த மாத அப்லோடும் டவுன்லோடும்!**

வாழ்க்கை நம்மிடம் பெரிதாக எதையும் எதிர்பார்ப்பதில்லை. ஒரு துளி நேர்மையை, ஒரு துளி ஒழுக்கத்தை, ஒரு துளி மனிதத்தை வெளிப்படுத்தினால் போதும்... வாழ்க்கை நமக்கு அள்ளிக் கொடுக்கக் காத்திருக்கும்.



காம்கேர் கே.புவனேஸ்வரி